[6th August 1966

பஞ்சாயத்து யூனியன்களில் தாய், சேய் நல விடுதிகள்

** 177 கேள்வி—**திரு. சோ. ஆறுமுகம்** : கனம் தல நிர்வாக அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப் பாரா---*

(அ) தமிழ்நாட்டில் ஊராட்சி ஒன்றிப்பு மன்றங்கள் ஒவ்வொன்றிலும் எத்தனை தாய், சேய் நல விடுதிகள் இன்றுவரை இயங்கி வருகின்றன ?

(இ) அவற்றில் முறையே அரசினர் கட்டடங்களிலும் மற்றக் கட்டடங்களிலும் இயங்கிவருபவை எத்தனை ?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : *சபைமுன் விவர, அறிக்கை* ᵃ *யொன்று வைக்கப்பட்டுள்ளது.*

திரு. சோ. ஆறுமுகம் : *தலைவர் அவர்களே, இதுபோல மருத்துவ மனைகள் பல வாடகைக் கட்டடங்களில் இயங்கி வருகின்றன. போதிய வசதி இல்லாததால் கிராமப்புறங்களில் மக்களுக்குத் தொல்லை ஏற்படுகிறது. ஆகையால் மருத்துவ மனை களுக்காக நிதியை ஒதுக்கிக் கட்டடங்கள் கட்டுவதற்கு ஏற்பாடு செய்யப்படுமா ?*

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : *தகுந்த அளவு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. அதற்கு மேலே கிராம மக்கள் அபிலாஷையுடன், ஆர்வத்துடன் வாடகைக் கட்டடங்கள் கொடுக் கிறார்கள். அதில் வைத்து நடத்தவேண்டுமென்று சொல்லி முன்வந்தால் அங்கே வைக்கப்படுகிறது. திட்ட அடிப்படையில் பொருளாதாரம் எவ்வளவு இடம் கொடுக்கிறதோ, அதற்குத் தக்கபடி சன்னஞ்சன்னமாகக் கட்டடங்கள் கட்டப்பட்டு வருகின்றன என்பதை கனம் அங்கத்தினர் அவர்கள் உணர்வார்கள் என்று நினைக்கிறேன்.*

கோரக்கேணி பஞ்சாயத்து

** 178 கேள்வி.—**திரு. எ. கோ. பாலகிருஷ்ணன்** : கனம் தல நிர்வாக அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—*

(அ) வானூர் பஞ்சாயத்து யூனியனைச் சேர்ந்த கோரக்கேணி பஞ்சாயத்தில் இருந்து பொன்னம்பூண்டியைத் தனிப் பஞ்சாயத் தாகப் பிரிக்கக் கோரி, பஞ்சாயத்துத் தீர்மானம் அரசாங்கத்திற்கு வந்ததா ?

(இ) ஆமெனில், அதன்மேல் என்ன நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்பட்டது ?

(உ) நீண்டநாள் தாமதத்திற்குக் காரணங்கள் யாவை ?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : *(அ) முதல் (உ) வரை. கோரக் கேணி பஞ்சாயத்து 10-6-1966-ம் தேதி நிறைவேற்றியுள்ள தீர்மானத்தில் பஞ்சாயத்தைப் பிரிப்பதற்கு ஒப்புக்கொண்டுள்ளது.*

ᵃ 133–154-ம் பக்கத்தில் நாலாவது இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.